


**26. 06. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. போதை பழக்கத்திற்கு அடிமையான இளைஞர்களை இயல்பு வாழ்க்கைக்கு மீட்டுவர மத்தியஅரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கூறியுள்ளார்.

2. நாட்டில் விடுபட்டுள்ள 4 கோடி வீடுகளுக்கும் இன்னும் மூன்றாண்டுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் என்று மத்திய நீர்மேலாண்மை துறை அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

3. சமூக முன்னேற்ற குறியீடுகளில் தமிழகம் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. நாகை மாவட்டம் செருதூரிலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

5. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

<u>அமித்ஷா</u>

போதை பொருள் விற்பனையாளர்களை இரும்பு கரம் கொண்டு ஒடுக்கி அப்பழக்கத்திற்கு அடிமையான இளைஞர்களை இயல்பு வாழ்க்கைக்கு மீட்டுவர மத்திய அரசின் முயற்சிகளை உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா எடுத்துரைத்தார்.

சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி அமைச்சர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், இளைஞர்களின் வளர்ச்சிக்கு போதை பழக்கம் ஒரு பெரும் தடையாக உள்ளது என்றார்.

போதை பொருள் பயன்பாடற்ற தேசத்தை உருவாக்கும் போராட்டத்தில் அனைவரும் பங்கேற்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு இதற்காக முழுமையான அணுகுமுறையை மேற்கொண்டு வரும் நிலையில் அரசின்

நடவடிக்கைகளுக்கு இத்தினம் மேலும் உத்வேகம் அளிக்கும் என்று திரு.அமித்ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"தடைகளை தகர்த்தெறிந்து போதை பொருள் பழக்கத்திலிருந்து அனைவரையும் காப்பாற்றி சிகிச்சையுடன் அனைவரையும் மீட்டெடுப்போம்" என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் ராமநாதபுரம் நெல்லை அரியலூர் புதுக்கோட்டை தேனி தர்மபுரி மதுரை திருப்பூர் காஞ்சிபுரம் மாவட்டங்களில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று நடைபெற்ற போதை பொருள் தடுப்பு தின நிகழ்ச்சியில் பங்கேற்ற மருத்துவ மாணவி எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

வாய்ஸ்

***********

<u>பி.எல்.வர்மா</u>

நாட்டில் போதை பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு இயக்கத்தில் 14 கோடி பேர் இணைந்துள்ளதாக மத்திய சமூக நீதி அதிகாரம் அளிப்புத்துறை இணை அமைச்சர் திரு.பி.எல்.வர்மா கூறியுள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச போதை ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் 4 லட்சம் கல்வி நிறுவனங்களும் இந்த இயக்கத்தில் பங்கேற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

போதை பழக்கத்திற்கு எதிராக அனைவரும் உறுதி மொழி ஏற்று ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபட தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

***********

<u>ராஜ்நாத்சிங்</u>

சீனாவின் க்விங்டோவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கூட்டு பிரகடனத்தில் இந்தியா கையெழுத்திட மறுத்துள்ளது.

இப்பிரகடன ஆவணத்தில் எல்லை தாண்டிய தீவிரவாத நடவடிக்கைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படாததால் இந்நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டதாக தெரிகிறது.

முன்னதாக பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தீவிரவாதம், வன்முறை, பயங்கரவாத நடவடிக்கைகள் பிராந்திய அமைதிக்கு ஊறுவிளைப்பதால் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தீவிரவாதத்தோடு வளமும், அமைதியும் இணைய முடியாது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

பெஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை மூலம் எல்லை தாண்டிய தீவிரவாத கட்டமைப்பை தகர்க்க இந்தியா செயலாற்றியதை அவர் எடுத்துரைத்தார்.

பயங்கரவாத முகாம்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளால் இத்தகைய மையங்கள் பாதுகாப்பாக செயல்பட முடியாது என்பதை இந்தியா உலகிற்கு உணர்த்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரட்டை நிலைப்பாடுகளுடன் தீவரவாதத்திற்கு துணை செல்லும் நாடுகள் உரிய பொறுப்பேற்க ஷாங்காய் நாடுகள் செயலாற்ற அமைச்சர் வலியுறுத்தினார்.

தீவிரவாதத்தை பயன்படுத்தி தங்களது சுய நலத்திற்காக பாதுகாப்பும், நிதி உதவியும் அளிக்கும் நாடுகள் அதற்குரிய பலன்களை அனுபவிக்க வேண்டும் என்றும் திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

***********

<u>மன் - கீ – பாத்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 123-வது முறையாக வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை நாளை வரை தெரிவிக்கலாம்.

***********

<u>சி.ஆர்.பாட்டில்</u>

நாட்டில் உள்ள 15 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்மேலாண்மை அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இன்னும் மூன்றாண்டுகளில் எஞ்சிய 4 கோடி வீடுகளுக்கும் குழாய்மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுவிடும் என்றார்.

பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவதால் வயிற்றுபோக்கு நோய்கள் போன்றவை குறைந்து நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் மதிப்பிட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

***********

<u>எல்.முருகன்</u>

விடுதலை போராட்ட வீரரும் தமிழ் அறிஞருமான மா.பொ.சிவஞானத்தின் 120ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில் நாட்டின் விடுதலைக்கும், தமிழ்மொழிக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு என்றென்றும் போற்றப்படும் என்றார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு மாநில அரசின் சார்பில் அமைச்சர்கள் திரு.மா.சுப்பிரமணியன், திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

***********

முதலமைச்சர்

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் 10 சதவிகித பங்களிப்பை தமிழ்நாடு வழங்குவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் 517 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற பணிகளை தொடங்கிவைத்து உரையாற்றினார்.

குமாரமங்கலம் பகுதியில் 6 கோடி ரூபாய் மதிப்பில் துணைமின் நிலையம் அமைக்கப்படும்,

5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் சிப்காட் திருப்பத்தூரில் ஏற்படுத்தப்படும்.
30 கோடி ரூபாய் செலவில் 7 கிலோ மீட்டர் நீள மலைவழி சாலை உருவாக்கப்படும்,

15 லட்சம் ரூபாய் மதிப்பில் அடுக்குமாடி வணிகவளாகம் மற்றும் ஒருகோடி ரூபாய் செலவில் புதிய நூலகம் ஏற்படுத்தப்படும் என்றும் கூறினார்.

சமூக முன்னேற்ற குறியீடுகளிலும் தமிழகம் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளதாக கூறிய முதலமைச்சர் பொருளாதார வளர்ச்சியில் பிற மாநிலங்களை விட புதிய உச்சத்தை எட்டியிருப்பதாக எடுத்துரைத்தார்.

தேசிய சராசரியை விட தமிழ்நாட்டில் தனிநபர் வருவாய் வளர்ச்சி தொடர்ந்து அதிக அளவில் உள்ளதாக குறிப்பிட்டார்.

***********

கீதாஜீவன்

தூத்துக்குடியில் 136 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் அரசு சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இம்மருத்துவமனை கட்டுமான பணிகளை இன்று பார்வையிட்ட பின்னர் இதை தெரிவித்த அவர் மத்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்படும் இம்மருத்துவமனை 7 தளங்களுடன் அமைக்கப்படுவதாக கூறினார்.

***********

அன்பில் மகேஷ்

நாகை மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகளை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று ஆய்வு செய்தார்.

நாகை பழைய பேருந்து நிலையத்தில் 20 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணியினையும் அவர் தொடங்கிவைத்தார்.

***********

சி.வி.கணேசன்

தமிழகத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன் மலையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நல திட்ட உதவிகளை இன்று வழங்கி பேசிய அவர் அரசின் திட்டங்களை, அரசு அலுவலர்கள், பொதுமக்களிடம் நேரடியாக கொண்டு சென்று மனுக்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

***********

எடப்பாடி

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் குற்ற சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

***********

நாகை

நாகை மாவட்டம் செருதூரிலிருந்து 2 கண்ணாடி இழை படகுகளில் கடலுக்குள் மீன்பிடிக்க சென்ற 10 மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் இன்று கடும் தாக்குதல் நிகழ்த்தியுள்ளனர்.

இம்மீனவர்களை அடித்ததோடு, அவர்களின் வலைகளை சேதப்படுத்தி ஜி.பி.எஸ் கருவியையும் பறித்துசென்றுள்ளனர்.

தாக்குதலில் காயமான மீனவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

நீர்நிலைகள்

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் மழை காரணமாக தென்காசி மாவட்டம் அடவிநயினார் கோவில் அணை 3 ஆண்டுகளுக்கு பின்னர் முழு கொள்ளவை எட்டிய நிலையில் அணைக்கு வந்துகொண்டிருக்கும் நீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது.

இதனால் பண்பொழி, கரிசல்குடியிருப்பு, இலத்தூர், ஆய்க்குடி உள்ளிட்ட கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இதேபோல் கருப்பாநதி, ராமநதி, கடனாநதி, குண்டாறு அணைகளின் நீர்வரத்தும் அதிகரித்து வருவதால் கார்பருவ சாகுபடி பணிகளுக்கு இது பயனளிக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு களக்காடு தலையணை அருவிகள் மற்றும் தேனி மாவட்டம் சுருளி அருவியில் வெள்ள பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கன மழையால் பேச்சிப்பாறை அணையிலிருந்து தொள்ளாயிரம் கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதை அடுத்து கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் உபரி நீரால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 18 ஆயிரத்து 290 கன அடியாக அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 32 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

***********

<u>வானிலை</u>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

கோவை நீலகிரி மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும்,

நெல்லை கன்னியாகுமரி தேனி தென்காசி மாவட்டங்களில் கன மழையும் இன்று பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோரம், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 30ஆம் தேதிவரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

***********

<u>இருவரி</u>

திருச்சி மணப்பாறை வீரமலைபாளையம் இன்றுமுதல் அடுத்த மாதம் 6ஆம் தேதிவரை துப்பாக்கி சுடும் பயிற்சி நடைபெற உள்ளதால் இப்பகுதிகளில் கால்நடைகளும், மனித நடமாட்டமும் இருக்க கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டம் நல்லம்பாளையம் அரசு தொடக்கப்பள்ளிகளில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ் காலை உணவின் தரத்தை ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி இன்று ஆய்வு செய்தார்.

தஞ்சை தென்னக கலை பண்பாட்டு மையத்தில் நாட்டுப்புற இசைக்கலைஞர்களின் 100ஆவது வார கலை நிகழ்ச்சிகளை ஒட்டி 400க்கும் மேற்பட்ட இசை கலைஞர்கள் பேரணியாக சென்று நாளை இந்நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் குடியிருப்பு பகுதிகளில் யானைகள் நுழைவதை தடுக்க அகழிகள் வெட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

***********

**<u>பேட்மிண்டன்</u>**

அயோவாவில் நடைபெறும் **U.S.Open** பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ஆகர்ஷி கஷ்யப், **Tanvi Sharma, Anmol Kharb** முன்னேறியுள்ளனர்.

***********